| | | |
|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **புதுக்கோட்டை** | காலம் : | **20/03/2024** | முதல் | **24/03/2024** |
| அறிக்கை எண் : | **023/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/03/2024** | | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (14.03.2024 **முதல்** 18.03.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-03-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/03 | 15/03 | 16/03 | 17/03 | 18/03 | **தேதி** | **நாள்-1** 20/03 | **நாள்-2** 21/03 | **நாள்-3** 22/03 | **நாள்-4** 23/03 | **நாள்-5** 24/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 8 | 4 | 10 | 2 |
| 38 | 38 | 39 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 36 | 36 | 8 |
| 24 | 24 | 26 | 25 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 24 | 24 | 25 |
| 4 | 4 | 5 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 6 | 5 | 4 |
| 69 | 69 | 78 | 82 | 77 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 84 | 82 | 86 | 84 | 80 |
| 29 | 34 | 33 | 37 | 35 | | 40 | 42 | 44 | 38 | 32 |
| 7 | 11 | 13 | 12 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 6 | 12 | 14 | 15 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 21, 23 தேதி மிதமான மழையும் மற்றும் 22, 24 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 15 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு மற்றும் கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 6 முதல் 15 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெண்டை, தர்பூசணி, கால்நடை.**

**வெண்டை:**

வெண்டை பயிரில் தத்துப் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை பூச்சிகளால் தாக்கப்பட்ட இலைகள் மஞ்சளாக மாறும், இலைகளின் ஓரங்கள் கீழ் நோக்கிச் சுருங்கி காணப்படும் அதன் உட்புறம் சிவப்பு நிறமாக மாறும்,

நாளடைவில் நெருப்பால் தீய்ந்தது போன்று நிறமாற்றம் பெறும், இலைகள் பொடி பொடியாக நொறுங்கி விடும். மேலும் செடிகளும் வளர்ச்சிக் குன்றி காணப்படும்.

இதனைக்கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு 100 மி.லி இமிடாகுளோ:ப்பிரிட் மருந்தினை 500 லிட்டர் தெளிதிரவத்துடன் கலந்து தெளிக்கவும்.

**தர்பூசணி:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் தர்பூசணிப் பயிரில் அசுவினி பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலின் காரணமாக இளம் மற்றும் முதிர்பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சும். இதன் காரணமாக கொடிகள் வாடும், பூக்கள் வாடி தொங்கும், இதனால் கொடிகளின் வளர்ச்சியும் தடைப்படும். இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 40கிராம் என்ற அளவில் வெர்டிசீலியம் லெக்கானி மற்றும் 10மில்லி ஒட்டும்பசை கலந்து தெளிக்கவேண்டும்.

**கால்நடை:**

விவசாயிகள் தங்கள் கோழிகளை கழிச்சல் நோயிலிருந்து காப்பாற்ற, நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும்.

பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2 கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால் சிரப் இரண்டையும் கலந்து 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க வைக்க வேண்டும்.